# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி
## மதிப்பீட்டுத் தாள் 2022—2023
## வளர்தமிழ் 5

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

சுட்டெண்: | | | | | | | | |

www.tamiledc.com

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC - FRANCE
TEDC - FRANCE
TEDC

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. தஞ்சைப்பெருங்கோவிலின் கோபுர அடுக்குகளில் ________________ நூற்றெட்டுக் கூத்து நிலைகளும் செதுக்கப்பட்டுள்ளன.
( முருகனுடைய, அம்மனுடைய, சிவனுடைய )

2. தமிழர் எங்கு வாழ்ந்தாலும் ________________ பேசுகின்றனர்.
( தமிழில், தமிலில், தமிளில் )

3. கமழ்தல் என்பது ________________
( தோன்றுதல், மணம் வீசுதல், போற்றுதல் )

4. கோப்பெருஞ்சோழ மன்னனின் நண்பன் ________________
( மோசிகீரனார், பெருந்தலைச்சாத்தனார், பிசிராந்தையார் )

5. தைப்பொங்கல் தமிழர் திருநாள். ________________ தமிழர்களால் உலகெங்கும் கொண்டாடப்படுகின்றது.
( அது, அவை, உது )

6. முயல்கள் துள்ளித்துள்ளிப் ________________ .
( ஊர்கின்றன, பாய்கின்றன, தொங்குகின்றன )

7. குறிஞ்சி நில மக்களின் கலை ________________ .
( பரதம், ஓவியம், குரவைக்கூத்து )

8. பேச்சு + போட்டி ________________
( பேச்சுப்போட்டி, பேச்சுபோட்டி, பேசும்போட்டி )

TEDC
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

9. பொங்கலன்று புதுப்பானைக்கு ________________ இலை கட்டுவர்.

( பலா, வாழை, இஞ்சி )

10. ______________ த் தொழிலுக்கு நிகரானது உலகில் எதுவும் இல்லை என ஔவையார் கூறுகின்றார்.

( நெசவு, ஆசிரியர், உழவு )

11. தோட்டத்தில் வாழைகள் ________________ எனச் செழித்து வளர்ந்திருந்தன.

( கலகல, மளமள, மதமத )

12. கடற்கரைச் சிற்றூர் ஒன்றில் உள்ள குன்றுகளைச் செதுக்கிச் சிற்பக்காடாக்கியவன் ________________ .

( நரசிம்மபல்லவன், இராசராசசோழன், நெடுஞ்சேரலாதன் )

13. பண்ணியங்களில் ஒன்று ________________ .

( நெல், வடை, சோளம் )

14. எந்தத் தட்ப வெப்ப சூழலிலும் தான் வாழும் மண்ணை விட்டு வேறு எங்கும் செல்லாத பறவை ________________.

( மயில், காகம், செண்பகம் )

15. **குறள்:**

சுற்றத்தாற் ________________ ப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்

( சுற்ற, கற்ற, பெற்ற )

16. உலகை ஒளியில் ஆழ்த்தியபடி கீழ்வானில் காலிப்பவன்

________________.

( நிலா, கதிரவன், மதி )

17. மயில் அகவும். அது போல குயில் ________________ .

( கரையும், கொக்கரிக்கும், கூவும் )

18. __________ தைப்பொங்கலன்று கதிரவனைப் போற்றி வணங்குவோம்.

( நாங்கள், நீங்கள், அவர்கள் )

19. இளங்கோவடிகள் எழுதிய நூல் ________________ .

( நல்வழி, சிலப்பதிகாரம், மூதுரை )

20. 90 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ________________ .

( தொன்னூறு, தொண்நூறு, தொண்ணூறு )

21. முதலெழுத்துகள் ________________ .

( 30, 18, 12 )

22. __________ இரவு வீசிய புயற்காற்றினால் மரங்கள் முறிந்து வீழ்ந்தன.

( இன்று, நாளை, நேற்று )

23. பின்வருவனவற்றுள் ஆனைந்தில் இடம்பெறாதது ________________ .

( தேன், தயிர், மோர் )

24. தீயோரது நட்பு எப்பொழுதும் ________________ த் தரும்.

( இன்பத்தை, செல்வத்தை, துன்பத்தை )

25. வரண்ட நிலச்செடி ______________ .

( அலரி, நாகதாளி, செவ்வரத்தை )

26. நிலத்தை உழுவதற்குப் பயன்படுவது ______________ .

( ஏர், மண்வெட்டி, கோடரி )

27. மக்கள் காலைவேளையில் பறவைகளின் ஒலிகளைக்

________________ மகிழ்வர்.

( பார்த்து, கண்டு, கேட்டு )

28. நீ ________________ பண்பாட்டைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

( அவனது, உனது, தனது )

29. இலக்கண வினா விடை, இலக்கணச் சுருக்கம் ஆகிய நூல்களை

எழுதியவர் ________________ .

( ஆறுமுகநாவலர், வேந்தனார், விபுலாநந்தர் )

30. மிகப்பெரிய சிவலிங்கத்தைக் கருவறையில் கொண்ட கோவில்

________________ .

( திருச்செந்தூர், மீனாட்சிஅம்மன், தஞ்சைப்பெருங்கோவில் )

புள்ளிகள் 30

## 2) அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக மாற்றி எழுதுக.

1. அறிவன் ____________________ ச் சென்றான். அவன் ____________________ நீந்தி மகிழ்ந்தான்.

   ( கடல் )

2. நான் ____________________ வீட்டுப்பாடங்களை ஒழுங்காகச் செய்வேன். அதனால் ஆசிரியருக்கு ____________________ மிகவும் பிடிக்கும்.

   ( நான் )

3. நாம் ____________________ பல பயன்களைப் பெறுகின்றோம். அதனால் ____________________ க் கற்பகதரு என்றும் அழைப்போம்.

   ( பனை )

4. நாம் எப்பொழுதும் ____________________ நட்புக் கொள்ளல் வேண்டும். ____________________ என்றும் உலகம் போற்றும்.

   ( நல்லவர் )

5. கிளித்தட்டு ____________________ மரபுவழி விளையாட்டுகளில் ஒன்று. இன்றும் அது ____________________ விரும்பி விளையாடப்படுகின்றது.

   ( தமிழர் )

புள்ளிகள் 10

TEDC தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## 3) கோடிட்ட சொற்களின் எதிர்ச்சொற்களை எழுதுக.

1. கோடைகாலத்தில் வெப்பம் அதிகமாக இருக்கும். ______________ காலத்தில் கம்பளியாடை அணிவார்கள்.

2. பயிர்கள் செழித்து வளர்வதற்கு கதிரவனின் ஒளி அகத்தியம். மின்விளக்குகள் திடீரென அணைந்ததால் ______________ சூழ்ந்தது.

3. வெற்றி பெற்ற சிறுமியை எல்லோரும் புகழ்ந்து பாராட்டினர். நாம் பிறரை ______________ பேசக்கூடாது.

4. பழங்கள் உண்பது உடல் நலத்துக்கு உகந்தது. மாமரத்தில் குலைகுலையாகக் ______________ காய்த்துத் தொங்குகின்றன.

5. நகரங்களில் பெரிய அடுக்குமாடிக் கட்டடங்களைக் காணலாம். கிராமங்களில் அழகான ______________ வீடுகளைக் காணலாம்.

TEDC தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TEDC

புள்ளிகள் 05

## 4) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. சலங்கைகள் ______________ எழுப்ப மாதவி அரங்கேறினாள்.

   ( ஒளி, ஒலி )

2. தொழிலாளர்கள் தமது ______________ க் கண்ணுங்கருத்துமாகச் செய்கின்றனர்.

   ( வேலைகளை, வேளைகளை )

3. வீட்டின் ______________ ஓலையால் வேயப்பட்டுள்ளது.

   ( கூறை, கூரை )

4. கடும் வறட்சியினால் ______________ நீர் வற்றியது.

   ( குளத்தில், குலத்தில் )

5. நன்கு ______________ பலாப்பழத்திலிருந்து நறுமணம் வீசியது.

   ( கணிந்த, கனிந்த )

TEDC
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

புள்ளிகள் 05

## 5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

| | | |
|---|---|---|
| கூத்து | மீன் | நெய்தல் |
| உழவு | நிலத்தை | |

நம் முன்னோர் ______________ நான்காக வகுத்தனர். அவை குறிஞ்சி, முல்லை, ______________, மருதம் என்பனவாகும். வயலும் வயல் சார்ந்த இடமும் மருதமாகும். மருதநில மக்களின் தொழில் ______________ த் தொழில். ஆனைந்து, ______________ என்பன அவர்களின் உணவாகும். இந்நிலத்துக்குரிய கடவுள் இந்திரன். இந்நில மக்களின் கலை ______________. நீர்ப்பறவைகள் இந்நிலத்துக்குரிய பறவைகளாகும்.

TEDC
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

புள்ளிகள் 10

## 6) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

உடலில் உறுதி கொண்டவரே உலகில் மகிழ்ச்சி உடையவர் ஆவர். உடற்பயிற்சியும் தூய்மையும் ஒருவரை நோயின்றி வாழ வைக்கும். எனவே நாம் நாள்தோறும் குளித்து உடலைத் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். உணவு உண்பதற்கு முன் கைகளை நன்றாகக் கழுவ வேண்டும். இரவு தூங்குவதற்கு முன்பும் காலையில் எழுந்தவுடனும் பல்துலக்க வேண்டும். காலையும் மாலையும் நடத்தல், உடற்பயிற்சி செய்தல் போன்றன உடலை உறுதி அடையச் செய்கின்றன. தூய்மையான காற்றும் நல்ல குடிநீரும் நன்கு பசித்த பிறகு உண்பதும் நலமான வாழ்வுக்கு அகத்தியமானவை.

1. எவை ஒருவரை நோயின்றி வாழ வைக்கும்?

____________________

2. நாம் உணவு உண்பதற்கு முன் என்ன செய்தல் வேண்டும்?

____________________

3. நாம் எப்போது பல்துலக்க வேண்டும்?

____________________

4. எவை உடலை உறுதி அடையச் செய்கின்றன?

____________________

____________________

5. எவை நலமான வாழ்வுக்கு அகத்தியமானவை ?

____________________

புள்ளிகள் 10

TEDC

## 7) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. அரண்மனை வாழ்வைத் துறந்து தமிழே துணை என வாழ்ந்தவர் யார்?

______________________________

2. உழவர் திருநாளை வேறு எப்படி அழைப்பர்?

______________________________

3. "மூத்தவன் இருக்க இளையவன் எப்படி அரசனாவது" இக்கூற்று யாரால், யாருக்குக் கூறப்பட்டது?

______________________________

4. கூத்தர், விறலியர் என அழைக்கப்பட்டோர் யாவர்?

______________________________

5. நண்பர்களுக்குத் துன்பம் வரும்போது எவ்வாறு உதவ வேண்டும்?

______________________________

6. மாடுகள் கட்டும் இடத்தை எவ்வாறு அழைப்பர்?

______________________________

7.

| **நிலம்** | **தெய்வம்** | **தொழில்** |
|---|---|---|
| முல்லை | ____________ | ____________ |
| நெய்தல் | ____________ | ____________ |

புள்ளிகள் 10

## 8) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

நான் ஐந்தாம் வகுப்புப் படிக்கின்றேன். நான் பள்ளிக்கு நடந்து செல்வேன். பள்ளியில் நான் நன்றாகப் படிப்பேன். மாலையில் அண்ணாவுடன் சேர்ந்து வீட்டுப்பாடங்களைச் செய்வேன். பின்னர் எனது நண்பர்களுடன் காற்பந்து விளையாடுவேன்.

TEDC

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

புள்ளிகள் 05

TEDC

9) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

- தமிழர் கலைத்திறன்
- குறள் கூறும் நட்பு
- எனது பள்ளி முதல்நாள்
- எனது குடும்பம்

புள்ளிகள் 15

TEDC
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TEDC